# மூன்றாம் தவணைப் பரீட்சை – 2024

| 33 | T | I |
|---|---|---|

| தரம் - 10 | | புள்ளி |
|---|---|---|
| ඉතිහාසය 1<br>வரலாறு 1<br>History 1 | INDEX NO: ................................ GRADE: .............. | පැය එකයි<br>ஒரு மணித்தியாலம்<br>One house |

கவனிக்க :

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாத்தாளுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்.

ii. **1 தொடக்கம் 40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **(1), (2), (3), (4)** என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**iii. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

iv. அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

## பகுதி - I

1. தீபவம்சம், மகாவம்சம் என்பன எழுதப்படுவதற்கு அடிப்படையாக அமைந்த நூல்களாக கருதப்படக் கூடியவைகளாவன

   1. மயூர சந்தேச, திசர சந்தேச
   2. சிகல அட்டகதா, வினய அட்டகதா
   3. சூளவம்சம், போதி வம்சம்
   4. தூபவம்சம், தாடவம்சம்

2. நாம் தொல்பொருள் மூலாதாரங்களை பாதுகாக்க வேண்டும். ஏனெனில் அவை

   1. இலங்கையின் தனித்துவத்தை எடுத்துக் காட்டும் சான்றுகளாக இருப்பதனாலாகும்
   2. சுற்றுலாத்துறைக்கு முக்கியத்துவமுடையதாக இருப்பதனாலாகும்
   3. பௌத்த, இந்து கட்டட நிர்மானக்கலைகளாக இருப்பதனாலாகும்
   4. கடந்தகால கலைத்திறன்களை வெளிக்காட்டும் ஆதாரங்களாக இருப்பதனாலாகும்

3. இலங்கைக்கு வருகை தராது இலங்கை பற்றிய நூலை எழுதிய இயேசு சபையின் சமய போதகரான போத்துக்கேய இனத்தவர்

   1. பிலிப்பஸ் பொல்தெவுஸ்
   2. பர்னாவோ டீ குவாரோஸ்
   3. ஜோவாவோ ரிபைரோ
   4. றொபட் நொக்ஸ்

4. இலங்கையில் தென்மாகாணத்தில் 45அடி ஆழத்தில் கல்லாயுதங்களுடன் கூடிய சரளைக்கற்படிவுகள் கிடைக்கப்பெற்ற இடம்

   1. இரத்தினபுரி
   2. பூந்தலவெல்ல
   3. பதிராஜவெல
   4. புத்தல

5. பச்சைக் களிமண்ணால் செய்யப்பட்ட ஓடம் போன்ற அமைப்பினுள் மட்பாண்டங்களில் அஸ்தி பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த முறை பின்பற்றப்பட்ட மயானங்கள் பின்வருவனவற்றுள்

1. ஹல்துமுல்ல, உடரஞ்சாடம்
2. உடரஞ்சாடம், பெரகல
3. ஹல்துமுல்ல, பெரகல
4. இப்பன்கட்டுவ, கல்சொஹன்

6. நிலத்தை அகழ்ந்து, அதன் மேல் மண்ணினால் மெழுகி அமைக்கப்பட்ட கி.பி 3ம் நூற்றாண்டைச் சேர்ந்த வீடு கண்டுபிடிக்கப்பட்ட இடம்

1. திஸ்ஸமகாராம
2. உடரஞ்சாடம்
3. மாகம
4. ஹல்துமுல்ல

7. இலங்கை நாகரீகத்தின் வளர்ச்சிக்கான அடிப்படை இடப்பட்ட காலப்பகுதியாக அமைவது

1. முன்வரலாற்றுக் காலம்
2. வரலாற்றுக் காலம்
3. வரலாற்றுக்கு முற்பட்ட காலம்
4. ஆரம்ப வரலாற்றுக் காலம்

8. சமஸ்கிரத மொழியில் வழங்கப்படும் சக்கரவர்த்தி என்னும் சொல்லிற்கு சிங்களத்தில் வழங்கப்படுவது

1. அமதி
2. சக்வத்தி
3. மகாராஜன்
4. சக்விதி

9. துட்டக்கைமுனு மன்னன் பலம்வாய்ந்த பருமகமாரின் ஒத்துளைப்பைப் பெற்றது பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு

1. அம்பகமுவ
2. சித்துல்பவ்வ
3. வெஸ்ஸகிரி
4. பதுளை தூண்

10. கி.மு 250ம் ஆண்டுக்குரிய கொத்கல்கந்தையில் உள்ள கல்வெட்டொன்றில் குகை ஒன்றை பிக்குகளுக்கு தானமளித்த பருமக “தொட்ட போஜக” என்பதன் பொருள்

1. படகுத்துறையை நிர்வகிப்பவர்
2. மக்களை மகிழ்விப்பவர்
3. பிரதேச ஆட்சியாளர்
4. கிழக்கு பிராசின அரசன்

11. ஐரோப்பியர்கள் எமது நாட்டின் மீது செல்வாக்குச் செலுத்தும் வரை பாதுகாப்பாக இருந்த இலங்கையின் இறைமைக்கு அத்திவாரமிட்ட மன்னன்

1. வசபன்
2. 1ம் பராக்கிரமபாகு
3. 1ம் விஜயபாகு
4. துட்டகைமுனு

12. ஆறாம் அக்கிரபோதி மன்னனது காலத்தில் இலங்கை இராஜதந்திரிகள் இருபது முறை சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டதன் நோக்கம்

1. இரு நாடுகளுக்கிடையிலான சமய, கலாச்சாரத்தை மேம்படுத்த
2. பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த
3. அரசியல் ரீதியில் நட்புறவைப் பேண
4. வர்த்தக, கலாச்சாரத் தொடர்பை உறுதிப்படுத்த

13. அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள வெஹெரகெம கல்வெட்டில் நூல் நூற்பவர்களைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட சொல்

1. தடிக
2. தம்பகர
3. ததவய
4. குபகர

14. ஆரம்ப காலத்தில் அனுராதபுரம் ஒரு நகரமாக வளர்ச்சி பெற்றமைக்கு முக்கிய காரணம்

1. இலங்கையின் அமைவிடம்
2. சிறந்த ஆட்சியாளர்கள்
3. பாதுகாப்பான இடமாக இருந்தமை
4. சர்வதேச வியாபாரம்

15. ஒருவர் இளமையாக, புத்திசாலியாக, குணத்தில் ஞானத்தில் மேம்பட்டவராயினும் அவரிடத்தில் கலை பற்றிய அறிவு இல்லாவிட்டால் வாசமற்ற காட்டுப் பூவுக்கு ஒப்பானவராவார் எனக் குறிப்பிடும் நூல்

1. லங்கோபகார
2. லோகோபகார
3. சமந்தாபாசதிகாவ
4. பூஜாலிய

16. புராதன காலத்தில் பௌத்த குருமார் ஆழ்ந்த தியானத்தில் ஈடுபடுவதற்காக பயன்படுத்தப்பட்ட கட்டட வகைகளுள் ஒன்று

1. பதனாகர
2. புகய
3. சிலைமனை
4. போதிமனை

17. பசுக்களின் பாதுகாப்பின் பொருட்டு சாந்தி பூஜை செய்யும் வழக்கம் இன்றும் கூட நடைமுறையில் காணப்படும் மாகாணங்கள் முறையே

1. மேல், மத்திய
2. சப்ரகமுவ, ஊவா
3. வடமேல், வடமத்தி
4. ஊவா, மத்திய

18. பண்டைய கல்வெட்டுக்களில் ரஜமொஹால் என்னும் பெயரால் குறிப்பிடப்படும் பகுதி

1. கலிங்கல்தொட்டி
2. நீர்ப்பாசன கால்வாய்
3. அலைதாங்கி
4. மடைக்கதவு

19. மகாவலி கங்கையின் கிளை நதியான அம்பன் கங்கையிலிருந்து எலகர கால்வாய் ஊடாக நீரைப் பெறும் குளங்கள்

1. குருளு வாவி, கிரித்தலை வாவி
2. யோத வாவி, கலா வாவி
3. மின்னேரியா குளம், கந்தளாய் குளம்
4. கவுடுளு வாவி, குருளு வாவி

20. **"அ"** பகுதியில் அளத்தல் முறைகளும், **"ஆ"** பகுதியில் அளத்தல் அலகுகளும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்தினால் வரும் சரியான விடைத் தொகுதி

| **"அ" பகுதி** | **"ஆ" பகுதி** |
|---|---|
| 1. நிறை | A. கவ்வ |
| 2. நீளம் | B. கரிசை |
| 3. காலம் | C. தரண |
| 4. நிலம் | D. வருடம் |

1. CADB
2. ADCB
3. DBCA
4. CBDA

21. அனுராதபுர ருவன்வெலிசாய அத்திவாரத்தின் சிறப்பியல்பாக அமைவது

1. கழிவுப் பொருள் முகாமைத்துவமாகும்
2. நீரியல் தொழிநுட்பமாகும்
3. நவீன கொங்றீட் தொழிநுட்பமாகும்
4. ஈர்ப்பு விசைத் தொழிநுட்பமாகும்

22. மாதுறு ஓயா நதிப்பள்ளத்தாக்கில் கண்டுபிடிக்கப்பட்ட புராதன நீர்ப்பாசன நிர்மாணம்

1. சுருங்கை
2. கலிங்கல் தொட்டி
3. கலிங்கல்
4. அலைதாங்கி

23. நான்காம் மஹிந்த மன்னனது வேவல்கெட்டிய கல்வெட்டில் காணப்படக் கூடிய தண்டனைகளைக் குறிப்பிடும் விடைத் தொகுதி

A - கொலைக் குற்றம் புரிந்தோரை தூக்கிலிட வேண்டும்

B - நோன்மதி தினத்தில் வியாபாரம் செய்வோரிடம் எண்ணெய் வரி அறவிட வேண்டும்

C - உரிய காலத்தில் அறுவடை செய்யத் தவறுவோரிடமிருந்து ஐந்து கலங் அபராதம் விதித்தமை

D - மிருகங்களைத் திருடியவர்களுக்கு நெற்றியில் அடையாளமிடல்

1. A யும் C யும்
2. A யும் B யும்
3. A யும் D யும்
4. B யும் C யும்

24. தனது கணவன் தூர நாடொன்றிற்கு வர்த்தகத்தின் பொருட்டு சென்று மூன்று ஆண்டுகளின் பின்னர் திரும்பி வரும் வரை தனியாக வாழ்ந்த ஒரு பெண்ணைப் பற்றிக் கூறும் நூல்

1. ராஜதரங்கனி
2. ரசவாஹினி
3. சத்தர்மலங்கார
4. பூஜாவலிய

25. ரன் தெவிசி கலந்த என்னும் வாசகம் பொறிக்கப்பட்டிருந்த தங்க உலோகத் துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்த விகாரை

1. ரன்கொத் விகாரை
2. ருவன் வெலிசாய
3. அபயகிரி விகாரை
4. ஜேத்தவனராமய

26. வட இந்திய வர்த்தகர்களால் இங்கு கொண்டு வரப்பட்ட ஹஸ்எபு என்னும் நாணயம் எவ்வகை உலோகத் தன்மை கொண்டது

1. தங்கம்
2. வெள்ளி
3. செம்பு
4. வெண்கலம்

27. லாகுகலையில் அமைந்தள்ள நில்கிரி சேய என்ற பெயரால் அழைக்கப்பட்ட பழைய தூபிக்கு அருகில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டில் குறிப்பிடப்பட்ட அரசி

1. லீலாவதி
2. சுகலாதேவி
3. சோமாவதி
4. சூளசீவலிதேவி

28. எமது புராதன கால மக்கள் உள்நாட்டில் விளைந்தவைகளை உணவாக உட்கொண்டனர். என்பதற்கு சான்றாக 10500 வருடங்களுக்கு முன்னரான மனிதன் வாழ்நததமைக்கான ஆதாரம் கிடைக்கப் பெற்ற இடம்

1. பாக்கியன்கல
2. கித்துல்கலபெலிலென
3. சீகிரியா
4. பெரகல

29. புராதன கால சுங்கவரி பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு

1. தோணிகல
2. சங்கமுவ விகாரை
3. கொடவாய
4. மிகிந்தலை

30. முதலாம் நகராக்கக் காலப்பகுதியில் தென்பகுதியின் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகத் திகழ்ந்த நகரம்

1. அம்பாந்தோட்டை
2. காலி
3. மாகம
4. மாத்தறை

31. பொலநறுவை இராசதானியை மூன்று முறை ஆட்சி செய்த லீலாவதியை ஆட்சிபீடமேற்றிய வம்சத்தினர்.

1. பரண் வம்சத்தினர்
2. இலம்பகர்ண வம்சத்தினர்
3. கலிங்க வம்சத்தினர்
4. பாண்டிய வம்சத்தினர்

32. தென்கிழக்காசிய நாடுகளின் கலைத்துறையைப் பிரதிபலிக்கும் பொலநறுவைக் கால சமயக்கட்டடக் கலைக்கு உதாரணமாகக் கொள்ளக் கூடியது

1. சத்மஹல் பிரசாதய, ரன்கொத் விகாரை
2. கல் விகாரை, சத்மஹல் பிரசாதய
3. ரன்கொத் விகாரை, கிரி விகாரை
4. சத்மஹல் பிரசாதய, கிரி விகாரை

33. ''கலிகால சாகித்ய சர்வஞ்ச பண்டிதன்'' என்ற நாமத்தைப் பெற்ற மன்னன்

1. 1ம் பராக்கிரமபாகு
2. 2ம் பராக்கிரமபாகு
3. 4ம் பராக்கிரமபாகு
4. 6ம் பராக்கிரமபாகு

34. 3ம் பராக்கிரமபாகுவிற்கும், 2ம் புவனேபாகுவிற்கும் இடையே ஆட்சியுரிமை தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டது எந்த இராசதானியிலாகும்.

1. குருநாகல்
2. கம்பளை
3. யாப்பாகுவ
4. தம்பதெனிய

35. கண்டி இராச்சிய கால நிருவாக முறையில் புனித தந்த தாதுவுக்குப் பொறுப்பான அதிகாரி

1. கஜநாயக்க நிலமே
2. சலுவட நிலமே
3. பத்வட நிலமே
4. தியவடன நிலமே

36. இலங்கை வரலாற்றில் கி.பி 1766ல் ஒல்லாந்தருடன் மிகக் கேவலமான உடன்படிக்கையொன்றை மேற்கொண்ட கண்டி மன்னன்

1. 1ம் விமலதர்மசூரியன்
2. 2ம் இராஜசிங்கன்
3. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
4. ஸ்ரீ விக்ரம இராஜசிங்கன்

37. மத்திய காலத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி காரணமாக பல்வேறு துறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. பின்வரும் எத்துறையில் பெரசல்ஸ் முக்கியத்துவம் பெறுகின்றார்

1. நாடுகாண் பயணம்
2. இலக்கியம்
3. மருத்துவம்
4. ஓவியம்

38. மறுமலர்ச்சிக் காலத்தில் இலக்கியத்துறைக்குப் பணியாற்றியவர்களுள் டிவினா கொமிடியா என்ற காவியத்தை எழுதியவர்

1. தாந்தே
2. பெற்றாக்
3. இராஸ்மஸ்
4. தோமஸ் மூர்

39. பின்வரும் போர்களுடன் தொடர்புடைய போத்துக்கேய தளபதிகளில் தவறான கூற்றாக அமைவது

| | | |
|---|---|---|
| A - தந்துரே | – | பெரோ லோபஸ் த சூஸா |
| B - முல்லேரியா | – | தலசர்தா |
| C - ரந்தெனிவெல | – | கொன்ஸ்தாந்தைன் த சூஸா |
| D - கன்னொறுவ | – | பிலிப் த ஒலிவேரா |

1. A
2. B
3. C
4. D

40. தொன் ஜுவான் என்ற கிறிஸ்தவ நாமத்தை சூடிக் கொண்ட கோட்டை இராச்சிய மன்னன்

1. 7ம் புவனேபாகு
2. 6ம் பராக்கிரமபாகு
3. தர்மபாலன்
4. 1ம் விமலதர்மசூரியன்

**(40x2=80 புள்ளிகள்)**